மாண்புமிகு திரு. கே. ஏ. இருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நேற்று இரவே மானியக் கோரிக்கையின் போது மதுரையில் உயர்நீதி மன்றத்தினுடைய ஒரு பிரிவை அமைப்பதற்கான சாத்தியக் கூறுகளையும், வாய்ப்புகளையும் தெளிவாகவே வெளியிட்டிருக்கிறேன். நேற்றையதினம் எனக்குக் கிடைத்த மேலும் ஒரு நல்ல செய்தி சென்னை உயர் நீதி மன்றத்தினுடைய தலைமை நீதிபதி 3 நீதிபதிகளை நியமித்து, மீண்டும் அதனுடைய சாத்தியக் கூறுகளை, மதுரை சென்று நீதிபதிகள் தங்குகிற இடம், அதனுடைய வசதிகளை எல்லாம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு அனுப்புவதாக தகவல் அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே, இது துரிதப்படுத்தப்படும் என்பதையும் அந்த நல்ல செய்தியையும் மாண்புமிகு உறுப்பினர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 69.

69—திருச்சியில் உயர்நீதி மன்றத்தின் பிரிவு அமைத்தல்.

*1816 திரு. ம. சின்னச்சாமி :

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) உயர்நீதிமன்றத்தின் பிரிவு திருச்சியில் ஏற்படுத்துமாறு மைய அரசுக்கு பரிந்துரை செய்யும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் தற்போதைய நிலை என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. இருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) உயர்நீதிமன்றத்தினுடைய பெஞ்ச் உருவாக்கப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். இப்போது அதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினருடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

திரு. ஓ. எஸ். அமர்நாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் அமைப்புச் சட்டம் 226-வது பிரிவின்படி மதுரையில் உயர்நீதி மன்றத்தின் பிரிவு ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்றால் மத்திய அரசினுடைய ஒப்புதல் வழங்கப்பட வேண்டும். மத்திய அரசு ஒப்புதல் வழங்கிவிட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. இருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே; கொள்கை அளவில் ஒப்புதல் அளிக்கப்பெற்றிருக்கிறது. துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட இருக்கிறது.

1991 செப்டம்பர் 25]

திரு. கே. ஆர். முருகானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே மதுரையில் உயர்நீதிமன்றத்தினுடைய பிரிவு ஒன்றை அமைப்பதாக சொல்லியிருக்கிறார்கள். இந்த நிலையிலே அங்கே இருக்க வேண்டிய அடிப்படை வசதிகள் மற்றும் வாய்ப்புகளை எல்லாம் உயர்நீதிமன்றத்தினுடைய குழு ஒன்று வந்து பார்வையிட வேண்டுமென்று சொல்கிறார்கள். மூன்று மாவட்டங்களுடைய நீதிபதிகள், அந்த அலுவலகங்கள் எல்லாம் இப்போது அந்தந்த மாவட்டங்களுடைய தலைநகரங்களுக்கு, காமராஜர் மாவட்டம், பசும்பொன் தேவர் முத்து இராமலிங்கம் மாவட்டம் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு மாற்றப்படுகின்றன. அந்தந்த கட்டடங்களுக்கான வசதிகள் மற்றும் வாய்ப்புகள் எல்லாம் அங்கே இருப்பதனாலே விரைவில் அது அமைக்கப்படக்கூடிய வழி இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வது போலத்தான் அரசும் உயர்நீதிமன்றத்தினுடைய கவனத்திற்கு கொண்டு வந்திருக்கிறது. மாண்புமிகு தலைமை நீதிபதி அங்கே செல்கிறபோது இந்தச் சாத்தியக் கூறுகளை எல்லாம் அனுதாபத்தோடு பரிசீலனை செய்வார்கள்.

திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதயத் தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சிக் காலத்திலே மதுரை மாநகரில் உயர்நீதிமன்றத்தினுடைய பிரிவை அமைக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் துரிதப்படுத்தப்பட இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மிக்க மகிழ்ச்சி. அப்படி அமைக்கப்பட இருக்கக்கூடிய உயர் நீதி மன்றப் பிரிவிலே எத்தனை நீதிபதிகள் இடம் பெற உள்ளார்கள்? அதே சமயத்தில் தற்சமயம் சென்னை உயர் நீதிமன்றத்திலே ஒரே ஒரு பெண் நீதிபதி மட்டுமே உள்ளார். புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே எந்தத் துறையை எடுத்தாலும் பெண்களுக்கு சிறப்பான பிரதிநிதித்துவம் அளித்து வரக்கூடிய காலக் கட்டத்திலே இன்னும் நிரப்பப்பட இருக்கக்கூடிய 9 நீதிபதி பதவிகளிலே மேலும் சில பெண் நீதிபதிகள் நியமிக்கப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வரவர் புரட்சித் தலைவி அவர்கள் தெளிவாக பெண்களுக்கு உரிய இடத்தை, நியாயமான இடத்தை, எல்லா துறைகளிலும் நல்க வேண்டும் என்பதை அவர்கள் ஒரு உறுதியான

கொள்கையாக வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு நீதிபதிகள் நியமிக்கப்படுகின்றபோது, இதை அவர்கள் நிச்சயமாகக் கணக்கில் எடுத்துக் கொண்டு, உரிய நியாயமான இடங்களை பெண் நீதிபதிகளுக்கு அளிப்பார்கள்.

முற்பகல் 9.35

திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நீதி மன்றத்தினுடைய பிரிவு மதுரையில் வருவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மகிழ்ச்சி. ஆனால் நான் அது திருச்சியிலே வர வேண்டுமென்பதற்காகச் சொல்வதற்குக் காரணம், நம்முடைய இதய தெய்வம் அமரர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் சென்னையில் இருக்கிற தமிழகத்தினுடைய தலைநகரைத் திருச்சிக்கு மாற்றலாமென்று ஒரு காலக் கட்டத்தில் தீவிரமாக, பரிசீலனை செய்தார்கள். திருச்சியை இரண்டாவது தலை நகரமாக்கலாம் என்று அன்றைக்கு அவர்கள் யோசனை செய்து கொண்டிருந்தார்கள். திருச்சியைப் பொறுத்த வரையில் பூகோள ரீதியாக தமிழகத்தின் மையப் பகுதியாக இருக்கிறது. ஆகவே, மதுரையில் உயர் நீதிமன்றத்தின் பிரிவை ஏற்படுத்த கொள்கை அளவில் மத்திய அரசு ஒத்துக் கொள்வதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதை மறு பரிசீலனை செய்து மத்தியப் பகுதியாக இருக்கிற திருச்சிக்கு அது மாற்றப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட எண்ணம் அரசுக்கு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 70—பேராசிரியர் (திருமதி) கவிநிலவு தர்மராஜ், திரு. வே. பெரியசாமி, திரு. ஆர். சிங்காரம், டாக்டர் சு. மணிமேகலை, திரு. வ. சத்தியமூர்த்தி, திரு. ப. கலியபெருமாள்—மாண்புமிகு கல்வி அமைச்சர்.

70—மேல்நிலைப் பள்ளிகளில் இடைநிலை ஆசிரியை பயிற்சி.

*318 பேராசிரியர் (திருமதி) கவிநிலவு தர்மராஜ்,
திரு. வே. பெரியசாமி
திரு. ஆர். சிங்காரம்
டாக்டர். (திருமதி). சு. மணிமேகலை
திரு. வ. சத்தியமூர்த்தி
திரு. ப. கலியபெருமாள்

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—